**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண். 04/2026 ல்**

**அசல் வழக்கு எண்.283/2020**

N. ராஜா மாலிக்,
த/பெ நைனாமுகமது,
எண்.13–17 திருப்பட்டுர் அஞ்சல்,
திருப்பத்தூர் தாலுக்கா,
சிவகங்கை மாவட்டம். ... மனுதாரர் /பிரதிவாதி

/எதிர் /

T.G. மணிகண்டன்,
த/பெ T. குணசேகரன்,
எண்.16/235,
தோப்பநாயக்கன்பட்டி அஞ்சல்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது, கடந்த 14.07.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.சரவணமுத்து அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி A.சுபைதாபானு அவர்களும் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

1) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வகுமுறை 11 விதி 14 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ், எதிர்மனுதாரர்/வாதியை இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள 6 ஆவணங்களை, தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிர்மனுதாரர்/வாதி இந்த வழக்கை ஒரு கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் கடன் தொகையை வசூலிக்க தாக்கல் செய்ததாகவும், சாட்சிய விசாரணையின்போது, வாதி ஜெகநாதன் சிட்ஸ் நிறுவனத்தில் வேலை செய்துள்ளார் என்றும், ஆனால், அவர் தனது குறுக்கு விசாரணையில், ஜெகநாதன் சீட்டு கம்பெனியில் வேலை செய்யவில்லையென்றும் பொய்யாக கூறியுள்ளதாகவும், எனவே இம்மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களான, அவரது வங்கிக் கணக்குகள், அவரது வருமான வரி தொடர்பான கணக்குகள், அவர் தாக்கல் செய்த வேறு வழக்குகள் தொடர்பான விவரங்கள், ஜெகநாதன் சீட்டுக் கம்பெனியில் அவர் வேலை செய்ததாக உள்ள விவரங்கள், MAR இஞ்சினியரிங் காலேஜ் விராலிமலையில் வேலை செய்த விவரங்கள் ஆகியவற்றை அவர் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமெனவும், இல்லாவிடில் இந்த மனுதாரர்/பிரதிவாதிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்றும் வாதிடப்பட்டது.

3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிர்மனுதாரர்/வாதி ஜெகநாதன் சீட்டுக் கம்பெனியில் வேலை செய்யவில்லை என்றும், மனுதாரர் சிதார் வெசல்ஸ் என்ற கம்பெனியில் வேலை செய்துள்ளார் என்றும், அதன்பிறகு வாதி சுய வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளார் என்றும், அவரது வங்கிக் கணக்குகள், வருமான வரி கணக்குகள் அவரது தனிப்பட்ட விவரங்கள் என்றும், அதை தாக்கல் செய்ய பிரதிவாதி கோர முடியாது என்றும், மனுதாரர் கோரியுள்ள ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றும், அசல் வழக்கானது கடனுறுதிச் சீட்டு வழக்கு என்றும், இந்த ஆவணங்கள் வழக்கை தீர்மானிக்க உதவாது என்றும், வழக்கை இழுத்தடிக்கவே இந்த மனுவை பிரதிவாதி தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4) இந்த மனுவில் பரிசீலிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு கருத்துகளும், வழக்ககாவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கானது, மனுதாரர்/பிரதிவாதி எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் தாவா கடனுறுதிச் சீட்டு அடிப்படையில் ரூ.25,00,000/- கடன் பெற்றதாகவும், அதற்கு வட்டியுடன் சேர்த்து ரூ. 31,00,000/-ஐ திரும்ப வசூலித்துத் தரக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இந்த வழக்கில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, அவர் ஜெகநாதன் சீட்டு நிறுவனத்தில் வேலை செய்ததாகக் கேட்கப்பட்டதை வாதி மறுத்துள்ளார். அவர் MAR இஞ்சினியரிங் கல்லூரியில் வேலை பார்த்ததாகவும், மேலும்,தான் இரண்டு வங்கிகளில் வங்கிக் கணக்கு வைத்திருந்ததாகவும், 2018–19, 2019–20, 2020–21 ஆகிய ஆண்டுகளின் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அவற்றை தாக்கல் செய்ய முடியும் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

7) ஆனால், இந்த மனுவில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், வாதியின் வங்கிக் கணக்குகள் மற்றும் மேற்சொன்ன ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்குகள் தவிர, அவர் ஏதாவது வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது பற்றிய விவரங்கள், பிரதிவாதியின் அறிவிப்பிற்கு வாதி ஏதேனும் பதிலறிவிப்பு அனுப்பியிருந்தால் அதனையும், MAR இஞ்சினியரிங் கல்லூரி மற்றும் ஜெகநாதன் சீட்டுக் கம்பெனி வேலை வாய்ப்பு பற்றிய விவரங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

8) உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 11 விதி 14ல் கீழ்கண்டவாறு உள்ளது

" **Rule 14** of **Order 11**CPC runs as follows:-

*"Production of documents:- It shall be lawful for the Court at any time during the pendency of any suit, to order the production by any party thereto, upon oath, of such of the*

*documents in his possession or power, relating to any matter in question each suit, as the Court shall think right; and the Court may deal with such documents, when produced, in such manner as shall appear just."*

9) மேற்படி விதியின்படி, நீதிமன்றம் ஒரு வழக்கின் விசாரணையின்போது, வழக்கின் ஒரு தரப்பினரை தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள வழக்கிற்கு தேவையான ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட முடியும் என்பது தெரிகிறது. எனவே, வாதியே தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள, ஆவணங்களைப் பொறுத்து மட்டும் இந்த மனு பின்வருமாறு பகுதியாக அனுமதிக்கத்தக்கதென முடிவு செய்யப் படுகிறது.மனுவில் கோரியுள்ள இதர ஆவணங்களைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

10) **முடிவாக,**

இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

1) எதிர்மனுதாரர்/வாதியே தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள, அவரது 2 வங்கிக் கணக்குகள் தொடர்பான விவரங்கள்(Statement of Two Bank Accounts from 2015 to 2020) , மற்றும் 2018-19, 2019-20, 2020-21 ஆகிய 3 நிதியாண்டுகளுக்கான வாதியின் வருமான வரிகணக்கு ஆவணங்களை மட்டும், அவர் 2 வாரங்களில் தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

2) மனுதாரர்/பிரதிவாதி மனுவில் கோரியுள்ள, இதர ஆவணங்களைப் பொறுத்து, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

3) மேற்படி பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள், இந்த வழக்கை தீர்மானிக்க எவ்விதம் உதவும் என்பதை, வழக்கின் இறுதியில் தான் தீர்மானிக்க முடியும்.

4) மேற்படி பத்தி 1ல் இரண்டு ஆவணங்களை, வாதி குறிப்பிட்ட காலத்தில், தாக்கல் செய்யாவிடில், அவருக்கெதிராக அவற்றைப் பொறுத்து மட்டும், எதிரிடை அனுமானம் (Adverse inferance) கோர மனுதாரர்/பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்றும், அதுதொடர்பாக, இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி, வழக்கின் இறுதியில் முடிவு செய்யப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

5) மனு செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 30 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.30 13:59:30 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.30 13:59:36 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**